868

உ

OFFICE OF THE REGIS[TRAR]
18 MAY 193
MADRAS

இம்மானுவேல் துணை.

உன்நீதி வெளிச்சத்தைப் போலவும்
உன் நியாயம் பட்டப்பகலைப் போலவும்
விளங்கப்பண்ணுவார்.

(1[illegible] 4 அதி. 8 வச.)

# பக்திரசபாமாலை.

இஃது

தூத்துக்குடியைச் சேர்ந்த
போல் நாயக்கன்பேட்டை
ஸ்ரீமதி P. தங்கம்மாளால்
இயற்றப்பட்டு

தூத்துக்குடி, முருகவிலாசம் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

(...தற்பதிப்பு.)

...4.

Q6:417
N34
123522

# கடவுள் வாழ்த்து.

OFFICE OF THE RE
18 MA

நேரிசை வெண்பா.

சிந்திக்க நெஞ்சடியேன் சென்னியிறைஞ்ச [illegible]
வந்திக்க எஞ்ஞான்றும் வாழ்த்துகவாய்—புந்திக்குள்
வீற்றிருக்கும் ஜேசு விரைமலர்ப் பூஞ்சேவடிக்கே
ஆற்றுகமெய் அன்பின்பணி.

அடியேனுடைய இருதயக் கமலத்துக்குள் வீற்றிருக்கும் ஏசு பெருமானுடைய வாசனையுள்ள மலர்போல் அழகிய செம்பாதங்கள் இரண்டையுமே அடியேனுடைய மனமானது எந்நேரமும் தியானிக்கக்கடவது. எனது கரங்கள் எப்பொழுதும் அஞ்சலிக்கக்கடவது. எனது வாய் எஞ்ஞான்றும் வாழ்த்தக்கடவது. எனது சரீரமானது எந்த நாளும் அவருடைய அருமைத் திருவடிக்கே அன்பின் பணிவிடையை ஆற்றக் கடவது.

S. பொன்னையா நாடார்,
போல்நாயக்கன் பேட்டை.

# முகவுரை.

இந்தப் பாடல்கள் போல்நாயக்கன்பேட்டை ஸ்ரீமதி P. தங்கம்மாளால் இயற்றப் பெற்ற பக்திரசப் பாமாலை. இப்பாமாலை யானது கிறிஸ்துவின் பிறப்பு, பாடு, மரணம் உயிர்த்தெழுதல் முதலானவைகளை கூறுவதுடன் மற்றவர்களும் இன்பமாய் வாசிக்கவும், வாசிக்கத் தெரியாதவர்கள் இன்பமாய் கேட்கவும், வாசித்த விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும், வசனத்தைவிட சங்கீதமே குதூகலத்தை விளைவிக்குமாதலாலும், எளிதான பல ராகத்தில் இயற்றியுள்ளது. கற்று வல்ல பெரியோர்கள் ஏதேனும் திருத்தங்கள் தெரிவித்தால் அதை சந்தோஷத்தோடும் நன்றியோடும் எற்றுக் கொள்ள சித்தமாய் இருக்கிறேன்.

எழை அடியேன்,
S. பொன்னையா நாடார்,
போல்நாயக்கன் பேட்டை.

# 1st SONG.

இராகம்—இந்துஸ்தான்.

வராவினை வந்தாலும் என்ற மெட்டு.

பல்லவி.

மங்களம் மங்களம் மகிழ்ந்தருள் கூறும்
மணவரை பந்தலில் வந்தருள் தேவா.

1 மகிழ்ந்துந் தன்பாடலை பாடித்துதிக்க
மன்னர்கள் கோதைகள் மகிழ்ந்து நல்பாட

2 சந்தத மங்களம் தானும் தழைக்க
தற்பரா உன் அருள் தந்து காருமே.

3 சோபன கீதங்கள் பாடித் துதிக்க
சுத்தமன துள்ளோருகக்கழிக்க.

4 இந்த மங்களங்க ளெங்கும் செழிக்க
எசு கர்த்தனே நீர் இந்நேரம் வாரும்

5 மிகாவேலின் ஆலயம் மேன்மை பெருக
மெய்த் தேவா உன்னருள் தந்துமே காரும்

6 திரியேக தேவனே திருச் சபை பெருக
தேவனே உன் சித்தம் இருக்கவே வேணும்

7 ஆதியு மில்லாமல் அந்தமு மில்லாமல்
அசை வாடிக் கொண்டிருந் தண்ணலே வாரும்

8 வானம் புவி திரை யாவும் படைத்த
வல்லமை ரட்சகா வந்திங்கே காரும்

9 புவியில் வெளிச்சம் பொற் பிரகாசம்
புதுமையாக உதிக்கச் செய்தீரே.

10 புல் பூண்டு விருட்சங்கள் யாவும் படைத்து
பூமானே உம்மைத் துதிக்கவும் தானே

11 நரர் வடிவான நல் ஆதாம் ஏவாளை
தம்மைக்கும்பிட நல்தாசர்களென்று

12 இணைபிரியாமல் இவரிருபேரும்
எந்நேரம் உன் துதி பாடிடச் செய்யும்.

13 கானா வின்கலியாணம் போனஎன் ஏசு
கர்த்தனே இக்கல்யாணமே வாரும்.

14 வந்து இவரிருபேரையுங் காரும்
வல்லமை ரட்சகா உன் அருள் தாரும்.

15 சிலுவைக் கொடியை விரித்துமே தேவா
ஜெயமாக இவ்விருபேரையுங் காரும்.

16 அவனி முழுவதும் ஆண்டஎன் தேவா
அன்புடனே இருபேரையுங் காரும்.

17 துணைபிரியாதிவர் தோகையின் மாதும்
சுத்தமன துள்ளோரா யிவர் வாழ.

18 குடித்தன வீரக்குணமுள்ள தாரம்
கொடுத்திடவே இவர்க்கருள் செய்த சுவாமி

19 மாட்சிமையின் தேவா வல்லமை ராஜா
மைந்தர்களோடிவர் மகிழவும் செய்யும்.

20 ஆபிரகாமோடு சாராளைக் காத்த
அண்ணலே இவரிருபேரையுங் காரும்.

21 செல்வம் சுகமும் இவர்க்கருள் செய்யும்
தேவா உன் ஆசீர்வாதத்தைக் கூறும்

22 சற் புத்திரரான.......................................
சாந்த குணமுள்ள.......................................

23 புத்திரரோடிவர் மகிழ்ந்துமே வாழ
பூமானே உன் அருள் தந்துமே காரும்.

24 குறையாத செல்வமும் நிறைவாகத் தாரும்
கொற்றவா இவர்களும் நீடூழி வாழ. மங்களம்.

---

## 2ND SONG.

இராகம்—இந்துஸ்தான் தாளம்—ஆதிதாளம்

### கிறிஸ்து பிறப்பு

1 அந்தர வான் புவிதர்த கிறிஸ்து அதிசயமாய்உதித்தார்
ஆதத்தின்பாவத்தை துலைத்திடவென்று அற்புதமாய்
பிறந்தார்—ஜெயம்-ஜெயம்.

2 மன்னுதி மன்னன் மகிமையின் ராஜன்
மாட்டுத் தொழுவமதில்
மாநரர் ரூபவடிவமெடுத்து மைந்தர்களைக்காக்க
—ஜெயம்

3 ஆச்சரியமான காட்சியைப் பார்த்திட அனைவரும்
கூடிடுவோம்
ஆத்தும நாதரின் அருளதைப் பார்த்திட அனைவரும்
கூடிடுவோம்—ஜெயம்.

4 கெம்பீரமாகக் கிழக்கத்தி சாஸ்திரிகள் கீதங்கள்
பாடிவர
ஆட்டிடையர் திரளாகத் திரண்டு அண்ணலைப்
பொற்றிடவே—ஜெயம்

5 ஆதாமின் சாபம் தீர்த்திடவென்று அவர் நர
ரூபமானார்
மாட்டுத் தொழுவத்தின் மங்கையின் முன்னணை
வந்து பிறந்தனரே—ஜெயம்
6 மூன்நூல்படியே மூன்றிலொன்றேனும் புல்அணையில்
பிறந்து
கந்தைத் துணிதனில் கர்த்தாதி கர்த்தனும்
களிப்பாகத் துள்ளுகிறார்—ஜெயம்.
7 பரமசேனை திரள் பந்து பந்தாகப் பாலரைப்
போற்றிடவே
பரலோக நாதரும் பாருறு வானது பாக்கியமாமிதுவே
—ஜெயம்
8 எல்லையில் கெம்பீரம் எந்நேரம் சந்தோஷம்
ஏசு எஜமானே ஏழைகளைக் காக்க இத்தரை வந்தது
எங்களின் லாபமதே—ஜெயம்
9 மிகா வேலின் ஆலயம் மேன்மை பெருகவே மெய்த்
தேவா காத்தருளும்
மெத்தப் படிப்பில்லா புத்திரரெங்களைத் தர்க்காக்க
வந்தருளும்—ஜெயம்

---

## 3RD SONG.

இராகம்— இங்கிலீஷ் தாளம்— ஆதிதாளம்

### தேவபிதா என்றன் மேய்ப்பனல்லோ என்றமெட்டு

**பல்லவி.**

துதிப்போம் துதிப்போம் தோழர்களே
நம் துரைமன்னர் ராஜனை போய்த்துதிப்போம்

அநுபல்லவி.

மகிழ்வோம் மகிழ்வோம் மன்னர்களே
நம் மகிமையின் ராஜனை மகிழ்ச்சியுடன்

சரணங்கள்.

1 சந்தோஷம் நமக்கு தந்தவரை
இத்தாரணியில் வந்துதித்தவரை
பரத்தை விட்டு பெத்தலேகேமில்
பாசமாய் வந்தார் நமக்காக—துதி.

2 இருளை நீக்கிட எம்பெருமான்
இக் குழந்தை தன் ரூபமானூர்
குடிமதிப் பெழுதிட கோதையுடன்
கூடியவர்கள் போயிருக்க—துதி.

3 பிரசவ காலம் நெருங்கியதால்
போனூர் அவர்கள் சத்திரத்தில்
சத்திரமதில் தங்கிடவே
தற்பரனூற் கங்கிடமில்லை—துதி.

4 ஆகமம் முழுதும் நிறைவேற
ராயன் பிறந்தார் புல்லணையில்
மகிமையின் சிங்காதனபதி தான்
மாட்டுத் தொழுவத்தில் வந்தனரே—துதி.

5 கோடிதூதர் சேனை விட்டு
கோமான் வந்தார் இவ்வுலகில்
இரவின் இருளை மாற்றிடவே
இடையர் மனதை தேற்றிடவே—துதி.

6 சர்ப்ப பேயை வென்றிடவும்
சகல பாவம் போக்கிடவும்
ஆதி வினையதைத்தான் அறுக்க
ராயன் பிறந்தார் புல்லணையில்— துதி.

7 மனுவேல் இந்த புவிதனிலே
மனுவாய் வந்தார் நம்மை மீட்க
வச்சிரக்கல் போன்ற மாளிகையை
மன்னர் விட்டு மனுவானார்— துதி.

8 பதுமை பாகத்து மேடை விட்டு
பரமன் வந்தார் பாவிகட்காய்
தீர்க்க தரிசனம் நிறைவேற
சேயாய் வந்தார் புவிதனிலே— துதி.

9 பாயும் கன்றின் பசுவுடனே
பரமனும் தாயும் தானிருக்க
ஏதேன் தோட்டமதில் செய்த
என் பாவமதை நீக்கிடவே— துதி.

10 கற்பனை மீறிய கனி தின்ற
கசப்பை மாற்றிட வந்தனரே
அன்பு மிகுந்த நல் ஆசையுடன்
அருமையின் ரட்சகர் பெருமை விட்டார்— துதி.

11 பெருமையை விட்டுப் பேதைகட்காய்
பிள்ளையாய் வந்தார் புல்லணையில்
பல்லாயிரம் கோடி படைப்புகளை
ஒரு சொல்லால் அமைத்த துரைமகன் தான்— துதி

12 துரைத்தனம் விட்டு இந்தப் புவிதனிலே
சுவாமி பிறந்தார் நமக்காக

இந்த நன்றிக்காய் நாமுமே
என்னத்தைக் கொண்டு தான் கொடுப்போம்-துதி

13 அவரும் நம்மில் வந்திருக்க
ஆசையாய்க் கொடுப்போம் இருதயத்தை
இங்கு பிறந்தார் மனுவேலன்
இந்த மிகாவேலின் ஆலயத்தில்—துதி.

14 வாவென்று நம்மை அழைக்கிறாரே
வரிசையாய் நாமும் போய் துதிப்போம்
இருதயமதிலே எம்பெருமான்
எல்லாருக்கும் வந்து உதயமாவார்—துதி.

---

## 4TH SONG.

மரக்கனி தின்றதாலே மனுக்குலம் கெட்டதாலே
மகிமை யின் ராஜன் மனு உருவாக வந்தார்.

1 வந்தனம் வந்தனமே இந்த மானிலம் வந்தவர்க்கு
சந்தோஷமங்களமே இந்தத் தாரணி வந்தவர்க்கு

2 விந்தைகிருபையாக அந்தவிண்ணுலம் விட்டவர்க்கு
கெம்பீரசந்தோஷமாய் இக்கிருபையாய் வந்தவர்க்கு
(வந்)

3 தோட்டக்கனியால்வந்தஇத்துயரத்தைமாற்றிடவே
உந்திக்கனிவாய் இங்கே உதித்தற்குவந்தனமே(வந்)

4 கட்டளை மீறியதால் கனி தின்ற பாவமதை
கன்னிமரியினிடம் இவர் காமுறு தேன் கனிவாய
(வந்.)

5 ஆதிவினையறுக்க இந்த ராஜனும் தான் மாறி
இந்நிலமேயுதித்த ஈசர்க்கு வந்தனமே (வந்)

6 தந்திரமாக நம்மை அந்த சாத்தான் கெடுத்திருக்க
சுந்திரமாயுதித்தார் அந்த தொல்லையைத் தான்
துலைக்க (வந்)

7 ராஜன் அரண்மனையில் அந்த நாதன் உதியாமல்
நீசமைக் கார்த்திடவே இந்த ஏழையின் ரூபமானூர்
(வந்)

8 மகிமையின் ஆசனத்தை இந்தமன்னர் விரும்பாமல்
மாட்டுத்தொழுவத்திலே இந்தமன்னர் உதித்திருக்க
(வந்)

9 ஆவியால் தான் உதித்த இந்த அண்ணலை தான்
துதித்து
இன்பப்பெருக்கால் வந்த இந்த ஈசர்க்கு வந்தனமே
(வந்)

10 தெய்வத் தன்மை மாறி இந்த சீமான் உதித்திருக்க
சேர்ந்துமே நாமும் வந்து இந்த சீமானைப்
போற்றிடுவோம் (வந்)

11 மகிமை விரும்பாமல் இந்த மன்னர் உதித்திருக்க
மாநரர் நாமும்கூடி இந்த மகிமையை பாடிடுவோம்
(வந்)

12 கஷ்டம் அனுபவிக்க இங்கே கன்னில் உதித்திருக்க
காதலாய் நாமும்கூடி இந்த காட்சியை
பார்த்திடுவோம் (வந்)

13 தாமே இருக்குமிடம் இவர் தம்மில் நம்மைச் சேர்க்க
விரும்பியே தான் பிறந்தார் அந்த விண்ணுலகை
விட்டு (வந்)

14 பாவம் பிடித்ததினுல் நாம் பாவியாய் போகாமல்
பாசம் மிகுந்தவராய் இந்த பாரில் உருவானுர் (வந்)

15 தெய்வலோகம் தனிலே சேர்ந்துமே நாமும் வாழ
பூலோகம் தன்னில் வந்த இந்த புண்ணியர்கு
மங்களமே (வந்)

16 தூதருடன்கூடி நாம் சொந்தமாய் தான் வாழ
அந்தர மேசியாவும் இங்கு தந்திரமாய் யுதித்தார்
வந்தனம்.

---

## 5TH SONG.

1 உன்பாதன் தந்தேன் தாகமதை தீரும் யேசுவே
உன்பரிசுத்த ஆவியால் எனைப்பரிசுரியும் நாதனே

2 ஆனஞான ஜோதி தேவா அன்புகூர் ஐயா
உன் அருளின் பிலத்தால் எனை ஆவனையும் ஏசுவே

3 அன்பைத் தாரும் துன்பந்தீரும் அருளை கூறுமே
உன் அருள் பிலத்தினுல் எனையும் அன்பாய் பாருமே

4 வான ஜோதியான தேவா வந்து பாருமே
உன் வல்லமையைத் தந்தெங்களைப் பாதுகாருமே

5 வான நாட்டை விட்டு வந்த வல்லமை தேவா
உன்சபை மணவாட்டி என்னைத் தாங்கி பாருமே

6 அன்பு எனக்கு இல்லை தேவா அறிவும் இல்லையே
உன்ஆசை தந்தேன் பாசமாக ஆக்கிக் கொள்ளவே
7 உன் தன்கற்பனைகளைக் கை கடந்த பாவிநான்
ஊக்கம் என்னில் உதிக்கவேண்டும் உத்தம தேவா
8 ஆவிவிசுவாசமில்லா அன்பில்லா தோமா
அண்ணலே உமைக்கண்டால் விசுவாசிப்பேன்
என்றார்
9 அது போல அன்பற்றதோர் பாவிநான் ஐயா
உன் அருள் பிலத்தால் எனை அன்பாய் பாருமே
10 அருங் கானிலே அன்பு கூர்ந்த அருமை கோமானே
அருளே பொருளே தெருளே எனை அன்பாய்
பாருமே
11 நீதிஎன்னில்லை சுவாமி நெறியுமில்லையே
நிதமும் உனது அருள் பிலத்தால் நிலைக்க
வேண்டுமே
12 பூமியிலே நான் ஒரு பெரிய பாவிதான்
பிழைபொருக்க வேண்டும் மென்று பேதை
போலானீர்
13 பேதைபோல் வந்தீர் எங்கள் பெரிய நாதனே
பேயின் தலையை நசுக்கவென்று பிள்ளை போலா
னீர்
14 வாதுகள் செய்யும் சுவாமி வலுமை சர்ப்பத்தை
ஒடுக்கவேண்டு மென்று சொல்லி உதித்து வந்தீரே
15 எந்தன் இருதயம் சுவாமி எல்லாம் கேடையா
சுத்தம் தந்து துற்குணத்தை மாற்றவாருமே

16 பாவி உன் நெஞ்சை எனதிருப்பிடமாக
இருக்க வேண்டுமென்று சொன்ன ஏசுநாதனே

17 வாபாவி என்னிடம் சுவாமி என்று சொன்னீரே
வந்தால் இளைப்பாறுதலை தருவேன் என்றீரே

18 எந்தன் சுயமாய் சுவாமி என்னதான் ஆகும்
ஏசுநாதர் ஏகசுதனாலேயே ஆகும்.

---

## 6TH SONG.

1 என்ன செய்வேன் என்று சொல்லி ஏங்காதே
என் நெஞ்சமே எத்தனை வந்தாலும் தற்காப்பார்
—எனதுள்ளமே.

2 மதிமயங்கி மனங்கலங்கி வாடாதே என் நெஞ்சமே
என் மயக்கம் மதையும் தீர்ப்பார்—எனதுள்ளமே

3 எந்தன் பெலன் ஒன்றுமில்லை எல்லாமுமே நீர்
அறிவீர்
எத்தனை வந்தாலும் அவர் என்னையும் தற்காப்பார்
—எனதுள்ளமே.

4 ஆழியான பூமியிலே அலையுதே என் நெஞ்சமே
ஆபத்து இல்லாமலும் காப்பார்—எனதுள்ளமே.

5 ஏதோ ஒரு சூச்சியம் போல் எல்லாமுமே தோன்று
தையா
இறைவனும் என்னையும் காப்பார்—எனதுள்ளமே.

6 ஏகபெரு வெள்ளம்போல் எத்தனையோ துன்பத்தில்
என்னையும் தற்காத்தவர்—எனதுள்ளமே

7 சேனை திரள் போலவே சேர்ந்தகஷ்டம் தன்னிலே
சேதமில்லாமலும் காத்தார்—என துள்ளமே.

8 அருங்கானகந் தன்னிலே ஆகாரைத் தற்காக்க வந்தவர்
ஆசையுடன் என்னையும் காப்பார்—என துள்ளமே.

9 மீன் பிடிக்கப்போன சீஷர் முன்னுக்கு போய் நின்றவர்
மூன்திப்பாய் என்னையும் காப்பார்—என துள்ளமே

10 கல்லறையைத் தொட்டெழுப்பி காக்ஷிதந்தவல்லவர்
கருத்துடன் என்னையும் காப்பார்—என துள்ளமே

11 மூழும் சூளை தன்னிலே மூவரைத் தற்காத்தவர்
மோசமின்றிஎன்னையும் காத்தவர்-என துள்ளமே.

12 ஆபிரகாம் அகந்தனில் அன்புடனே போனவர்
அருள் தந்து என்னையும் காப்பார்—என துள்ளமே

13 ஆலயத்தில் அன்னாளுக்கு ஆசீர்வாதம் தந்தவர்
இவர் அனுக்கிரகம் செய்யவல்லவர்—என துள்ளமே

14 பக்தி தரும் பாலரிவர் சித்த ரூபகாரராம்
முத்தி தரும் வித்த நாதராம்—என துள்ளமே

15 அன்பிரக்க முள்ளவர் ஆதிகுருவானவர்
அண்ணலாம் இவரின் நாமமே—என துள்ளமே

16 நீதி குருவானவர் நீழிம் துரந்தவர்
நீதி உருவாக வந்தவர்—என துள்ளமே

17 வல்லமை உடையவர் வானகுருவானவர்
வகுத்த நாதர் இவர் தாமே—என துள்ளமே

18 செங்கடல் பிளந்தவர் சேனை முன் நடந்தவர்
சித்திர விநோதமுள்ளவர்—எனதுள்ளமே.

19 பத்து நெறி தந்தவர் பார்வோனை அழித்தவர்
பத்தர் உபகாரர் இவராம்—எனதுள்ளமே.

20 மேகத்தில் இறங்கினோர் மோசேயுடன் பேசினோர்
முத்தி தரும் வல்ல நாதராம்—எனதுள்ளமே.

21 வனாந்தரந் தன்னிலே வல்லமன்னா ஈந்தவர்
வாட்டமின்றி என்னையும் காப்பார்—எனதுள்ளமே

22 கன்னிலுருவானவர் காரணமாய் வந்தவர்
காட்சி தரும் வல்ல நாதராம்—எனதுள்ளமே.

23 மாட்சிமை யளித்தவர் மாங்கிஷத்தில் வந்தவர்
மனு உருவான ராஜனும்—எனதுள்ளமே.

24 பெத்தலேகம் ஊர்தனில் பிள்ளையாய் பிறந்தவர்
பேதையை தற்காக்க வந்தவர்—எனதுள்ளமே.

25 வல்ல விஷம் தீர்த்தவர் மாந்தரைத் தற்காத்தவர்
மகிமையுடன் என்னையும் காப்பார்—எனதுள்ளமே.

---

## 7TH SONG.

1 வருவாய் வரம் தருவாய் ஜெகதீசா
பார்த்திபனே யுதக் கோத்திரனே
எனைக் கார்த்திடவே

2 கீர்த்தியான சர்ப்பாத்திரனே
யூதக் கோத்திரனே எனைக் காத்திடவே (வரு)

3 அன்னை மரி தன்சுதனே
ஆயர்கள் பணியும் புதனே (வரு)

4 நம்பினேன் எனைக் காவாய்
நாதனே உன் பாதம் கதியே ,,

5 நீதியானதோர் ஆதவனே
நிமலா போர் துயர் சாதகனே ,,

6 வான் ஜோதிகள் தேடிடவே
காணியாளர்கள் கூடிடவே ,,

7 இந்த உலகில் பாவமதை
யாவும் தீர்க்க வென்றுருகி ,,

8 பரிசுத்தத்தின் பந்திதனில்
பாங்குடனே எனைச் சேர்த்திடவே ,,

9 இந்த உலகத்தில் நிந்தையது
எத்தனையோ திரள் வந்ததையோ ,,

10 அத்தனையும் பொருத்தாண்டிடவே
அப்பனே உன் அருள் தந்தருளும் ,,

11 சென்ற வருஷம் முழுவதுமே
நான் செய்த பாவங்கள் தீர்த்திடவே ,,

12 கெட்ட சாத்தான் எண்ணமது
என் கிட்டவந்து எட்டிடாமல் ,,

13 பழைய பாவத்தாசை என்னை
பற்றிக்கொண்டு இழுத்திடாமல் ,,

14 பாவி நான் செய்த பாவமதை
பஞ்சனப் பறத்திட வந்திடுவாய் (வரு)

15 உறைந்த மழையது வெண்மையைப் போல்
உத்தமனே எனைக் காத்திடவே (வரு)

16 பால் மறந்த நல் குழந்தையைப்போல்
என் பாவமதையும் நான் மறக்க ,,

17 ஜென்ம பாவம் நல் கர்ம பாவம்
நான் ஜெனித்த பாவமதைத் தீர்க்க ,,

18 விலை மதியாத உன் ரத்தமதை
விட்டென்னையும் கழிவிடவே ,,

19 வருஷா வருஷம் முழுவதுமே
வாடா உன்றன் துதிபாட ,,

20 பெருக பெருக இரக்கம் செய்த
பிதாவே உமக்கு தோத்திரமே ,,

21 சென்ற வருஷம் முழுவதுமே
தீங்குகள் இல்லாமல் காத்து வந்தீர் ,,

22 இந்த வருஷம் அதைப் பார்க்க
இரக்கம் செய்த என் ஏசுவே ,,

23 அடுத்த வருடமதைக் கண்டு
அன்புடனே உமை துதித்திடவே (வரு)

---

## 8TH SONG.

எஸ்த ராணியே உன் வேண்டுதல் என்ன
என்ற மெட்டு.

1 அன்பின் ராஜனே அருள் தந்து காருமே
கெம்பீரமான கிருபாசனத் துரையே

600 008.

2 ஆதிமூலமே அருளும் ஞானமே
மருள்கள் தீரவே என் மத்தியில் வாருமே

3 பாதுகாக்கவே என் பக்கம் வாருமே
பார்த்திபனே நீர் உன் பந்தி சேருமே

4 ஆசையாகவே எனை அன்பாய பாருமே
பரமராஜனை எனை பாதுகாருமே

5 நீதி தேவனே நெறியான ராஜனே
நிலைப்படுத்தவே நிமலா நிதமும் பாருமே

6 வானம் புவி திரை வகுத்த ரட்சகா
உன் வாய்மை தந்தென்னை வளமாக்க வாருமே

7 துர்க்குணம் தீர்த்து தூய ஆவி தாருமே
உன் சுகந்த வாசனை என்னில் துதிக்க வேண்டுமே

8 முற்பிதாக்களின் மூன்றிலொன்றோனே
இக்காலந் தன்னிலே கழிப்பாக வாருமே

9 ஆபிரகாமுக்கு அடையாளங்கள் சொன்ன
அன்பின் ராஜனே அருள் தந்து காருமே

10 மோசே முனிவர்க்கு முட்செடி தனில்
காட்சி காட்டிய கருணை தேவனே

11 தாவீதாசன் தன் குற்றம் தெரியவே
தயாளமுடனே தான் சொல்லவில்லையோ

12 தண்ணீர்க்குப் போன் சமாரியாளிடம்
தாகமில்லாமல் தண்ணீர் தாரேன் என்றீரே

13 பாவம் நிறைந்த இப்பாழ் வனந்தனில்
நான் பாவி எப்படி பண்பாய் நடப்பேன்

14 நீதியுமில்லை நெறியுமில்லையே
இந்த நிஷ்ட வனத்தில் நான் நிலைப்பதெப்படி

15 வேங்கை புலிகள் ஒதுங்கும் வனத்தில்
வேந்தனே உன்தன் வேண்டுதல் வேணும்

16 துஷ்ட மிருகங்கள் தூங்கா வனத்தில்
நான் துதிகள் பாடவே உன் துணையும் வேண்டுமே

17 மாய எண்ணங்கள் என் மதிமயங்குதே
மன்னவா நீரும் என் மயக்கம் தீர் ஐயா
18 கெட்ட சாத்தானும் என் கிட்டவராமல்
கெட்டியாகவே என் கிருபை தாருமே
19 சூதும் வாதுமே எனை துன்பம் செய்யாமல்
நான் துதிக்கும் தேவனே உன் துணையும் வேண்டுமே
20 ஏகமாய் இருள் என்னை மூடிக்கொள்ளாமல்
இலங்கும் தேவனே தூய ஆவி தாருமே
21 ஆளிறங்காத ஆழிதான் இது
நான் அமிழ்ந்து போகாமல் என் அருகில் வாருமே

---

## 9TH SONG.

விருத்தம்.

ஏதும் தெரியாத எனைச் சூழ்ந்த காரிருளை
அய்யனே அதைநீர்க்க உன் ஆவிவிட்டே உயிர்த்தாய்

பாட்டு.

1 சென்றார் சென்றார் மனுவேலன்
ஜெயங்கள் அடைந்தார் மனுவேலன்
2 வெற்றி சிறந்தார் மனுவேலன்
வேதம் முழுதும் நிறைவேற்றி (சென்)
3 கல்கள் அடைக்கப்பட்டிருக்க
காவலவர்கள் விழித்திருக்க (சென்)
4 வாரத்தின் முதலாம் நாளது தனிலே
மகதலேமரியாள் தம்மன்னனைப் பார்த்திட (சென்)
5 மாதாக மிஞ்சியே ஓடினாள் இருட்டினில்
கல்லறை சென்றனள் கன்னிகையும் (சென்)
6 வெண்ணங்கி தரித்த தூதரைக் கண்டு
வெந்துமே நொந்து மனது கலங்கினார் (சென்)

7 தூதனும் அந்த செய்தியை அறிந்து
துயரப்படாதே நம்துரை மன்னர் ஏகினார்(சென்)

8 சிலுவை சுமந்த நம் நசரேனும் ஏசு
துன்பத்தை நீக்கிடப் பரமேவினார் (சென்)

9 பன்னிரு சீஷரும் பகைவரும் காண
பார்த்துக் கெழுந்தார் நம் அரசன் (சென்)

10 வேதாளக் கொடுதியைத் தான் தணித்து
வெற்றி சிறந்தார் நம் அரசன் (சென்)

11 பாழ் நரகில் நம்மை விட்டிடாமல்
பரலோகம் சென்றார் நம் அரசன் (சென்)

12 அன்னாவும் காய்பாவும் அங்கங்கொதிக்க
அருமையின் ரட்சகர் அவ்வுலகேகினார் (சென்)

13 அன்பு மிகுந்த நல் ஆசையுடன்
ஆவலாய் நம்மை மீட்டு விட்டார் (சென்)

14 கர்த்தாதி கர்த்தனும் பரலோகம் சென்ற
காட்சியைப் பார்த்திட வந்திடுங்கள் (சென்)

---

விருத்தம்.

மாசற்ற ஆட்டுக்குட்டி
நீர் சிலுவையில் தொங்கி
எல்லார் கடன் செலுத்தி
இரக்கத்தாலே பொங்கி,
பொல்லாப்பைச் சாவால் வென்றீர்
பொல்லாருக்காகச் சென்றீர்
அடியார் மேல் இரங்கி.

S. பொன்னையா நாடார்,
மேல் நாயக்கன் பேட்டை, தூத்துக்குடி.

---